உ

ராமபதி துணை.

கதிரேசன் பேரில்

ஆனந்தக் களிப்பும்,

கதாசாம வசலும், கதிர் ராமக் கும்மியும்,
கதிர்காம மாலையும் சேர்ந்திருக்கிறது.



இராமநாதபுரம் ஜில்லா
திருப்புல்லாணியிலிருக்கும்
தங்கமுத்து ராமலிங்கம் பிள்ளையவர்கள்
இயற்றியது

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்


எஸ். வேணுகோபால் நாயுடு
அவர்களால்

மதுரை வடக்குமாசிவீதி குருசாமிக் கோனார்தெரு
ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப் பெற்றது.

விலை] 19-9 [அணா 4

உ

சிவமயம்.



கதிரேசன் பேரில்
ஆனந்தக் களிப்பு.

காப்பு.

குறுவிருத்தம்.

வெத்தி மாமயில் வேலவர் மீதினிற்
சித்தி யானந்தச் சிந்து புகழ்ந்திட
சத்தி வாலை யருள்திரு மாமத
அத்தி மாமுக னெங்கரன் காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

தானந்த னாதந்த னானா தந்த
தானாத னாகந்த னாதந்த னானா.

சீர்மேவுங் கதிர்காமம் வாழும் வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலெந்நாளும்
பார்புகழ வேதுதி சிறக்க எங்கள்
பாரமத யானைமுகன் றன்னருள் பெருக்க

தானந்த நடனமயி லேறுஞ் சுவாமி
சரவண பவாநந்தன் மீதிலருள் சேரும்
ஆனந்தக் களிப்பதனைப்பாட கைலை
யாளிமல ரடியைநா னனுதினமுந் தேட
சதுர்முகன் தேவிநயந் தரவே யிந்தத்
தாரணியி லுகந்தகவி வாணர்ஜெயம் பெறவே
கதிர்காம மாநகர் சிறப்பாம் எங்கள்
கண்ணனரு ளால்சொன்ன ஆனந்தக் களிப்பாம்
திசைமெய்த்த புகழ்கொண்டு நாளும் நல்ல
செல்வமிகு யாபார தர்மமது வாழும்
வசியகுல நகரத்தார் தானே வந்து
வணங்குமெங்கள் கதிரேசன் சந்நிதியில் நானே
சொன்னகவி தன்னையரங் கேற்ற அதனிற்
சொற்பிழைகள் வாராமல் நாவினுற்போற்ற
நன்னய மிகுந்த தெய்வானை யம்மன்
நற்கமல ரடியிணையை நான் துதிப்பேனே
அருமறைகள் புகழ் துதிகள் பூணும் வள்ளி
யம்மையென் கவிதனக் கருள் தரவும்வேணும்
குருமுனியைப் பணிந்துகவி போற்ற அதற்குக்
குறைகளொன்றும் வாராமற் சபையிலரங் கேற்ற
சீதையால் ராமனு முன்னாலே வந்து
தெர்ப்ப சயனஞ்செய்த திருப்புல் லாணியிலே
நாதனருள் கங்கைகுல சீலன் தங்கம்
ராமசாமி சொன்ன கவிக்குகந்த வேலன்
எச்சரிக்கை யென்றிடும்பன் கூற வந்து
இருபுறமுங் காவடிகள் நின்று விளையாட
பச்சைமயி லேறியருள் சீலன் நித்தியம்
பக்ஷம்வைத் தென்கலி யகற்றும்வடி வேலன்
தென்கதிர் மானகர் விளங்க வந்த
தேவாதி தேவர்ஜெயங் கூறியே முழங்க
அன்பான சன்னதி யிலங்கக் கங்கை
ஆறுமுக வேலருட மாபதி துலங்க
முன்னாலே கோபுர முகப்பும் எங்கள்
முருகேசன் கோவில்முழுச் செம்பால் வகுப்பும்

அன்னமெனும் தெய்வானை மாடம் வள்ளி
யம்மைபந் தடித்துவிளை யாடிடுங் கூடம்
மூதண்டயோகபதி யேறும் கதிரை
முத்துலிங்க சுவாமியுட சன்னதியைப் பாரும்
நாதமொடு கீதமு முழங்க வசிய
நகரத்தார் கட்டிவைத்த சத்திரம் விளங்க
காணிக்கை கொண்டு வெகுகோடி ஜனங்கள்
கதிரேசன் சன்னதிக்கு வருவார்கள் தேடி
மாணிக்க கெங்கை நீராட இங்கே
மாதவரும் மனிதர்களும் வந்து நிதங்கூட
பொன்னலங் காரநகர் வாசம் எங்கும்
புகழ்பெற்ற நவரத்தின மேவிளையுந் தேசம்
சொன்னமிகு கதிரைவள மெத்த தோழி
சொல்லுகிறேன் நாட்டுவளம் வானுலகுதித்த
இந்திரன் ஏவலதி னாலே வந்த
எழுமேக மும்மொன்று கூடியேமேலே
சந்திரனுகவுமே யோங்கிச் சத்தச்
சாகர மதிற்றாவித் தண்ணீரை வாங்கி
மாலான விசும்பிடை படர்ந்து முகில்கள்
மண்டியே கெர்ச்சித்து மின்னலுட னடர்ந்து
நாலுதிசை நாடியே தெளிந்து கதிரை
நகர்பூமி யெங்குமழை மாரிகள் பொழிந்து
ஏரிகுளம் வாவிகள் நிறைந்து வயல்க
ளெங்கெங்கு மேகன்னல் செந்நெலும் வளர்ந்து
வீரிய மிகுந்தமுது நாண நல்ல
வெண்கமுகு சோலைமலை மேலெங்குந்தோண
தனியே பழுத்துதிருமாவும் அதனிற்
றாவியொரு கொம்போடே கொக்குகளுமேவும்
இனியமலர் வாசனைகள் தேடும் பறவை
இருபத்து நாலுகால் வண்டினங் கூடும்
நாகமது நாகமதிலேறும் துய்ய
நாகமேபுனை நந்தசில மரத்தினையும் பாரும்
நாகமலர் சோருமலர் முல்லை யிந்த
நாட்டினிலே மலைபகடுக் கொருகொம்புமில்லை

முல்லையிரு வாட்சிக ளெடுத்து அந்த
முல்லையிலே யிதழில்லா மடவார் தொடுத்து
வல்லவினை தீரவெனத்தேடி மாது
வள்ளிதெய்வானைதனக் கிடுவார்கள் கோடி
சதுர்மறையும் புகழ்தேவரிங்கே வந்து
தான்வாசஞ் செய்கதிரை மாணிக்கக் கெங்கை
இதிலே நீராடுவது பத்தி ஜென்மம்
ஈடேறுஞ் சாயுச்சிய பதவியிலே சித்தி
கோலமா மலையழகைப்பாரும் கதிரை
குமரேச னருளாலே வல்வினைகள் தீரும்
மூலகண பதிக்கிளைய வாகன் கதிரை
முத்ராமலிங்கனுக் கருள்செய்தயோகன்
மாமேவும் புவிபுகழுந் தேட்டான் கதிரை
மகிமைகளைச் சேடனு லளவிடவுமாட்டான்
பூமேவுங் குழல்வள்ளி நேயன் சுவாமி
புண்ணியன் தேவர்மனி தருக்குமுபாயன்
பச்சைமால்தனக்கு மருகோனே சுவாமி
பழனிமலைமீதினிலே மேவு முருகோனே
வச்சிரா யுதன்நம்பி மருகா உந்தன்
மலரடியை நீயெனக்குத் தரவே ணுமுருகா
நவவீரர் துணையான குகனே நம்பி
நாராயணன்றங்கை யபிராமி மகனே
நவமணியணிந்த வொளிதேவா நின்று
நடனமிடு மயிலேறி யெனைவந்துகாவா
கனகுண்டலமிட்ட காதா சுவாமி
கார்த்திகேயாலட்சம் படைவீரர்தாதா
சனமேருபாக்கியமருள் வேலா எங்கும்
சர்வபரிபூரணு னந்தசிவபாலா
ஓராறுமங்கையர்கள் சேயன் பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவு தூயன்
ஈராறுபன்னிருகை யாண்டி புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தயெய்யாண்டி
ஆண்டிபொன்னுண்டி சிவனுண்டி பழனி
யாண்டி மலையாண்டி சிலை யாண்டியிவனுண்டி

ஆண்டிமகனாண்டியிவ னாண்டி   நதிகள்
    அழகான சாமிமலை திருப்பரங்குன்றாண்டி
சிக்கல்புரவச்சேரி யாண்டி   சுவாமி
    திருச்செந்தூ ரெட்டிகுடி குன்றைக்குடி யாண்டி
மிக்கதிருவேரகத்தாண்டி   கதிரை
    மேவிவளர்வேல்முருக னாறுமுகத்தாண்டி
சோலைமலைகழுகுமலையாண்டி   நல்ல
    தோகைமலை விராலிமலை சென்னிமலையாண்டி
வாலையருள் பெற்றவடி வேலா   முனிவர்
    மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா
விடவரவுபடமும் விசைகெடவும்   படியே
    விடவரைகள் திடுதிடென ஜெகமுமசைபடவும்
கடல்சுவறக்கதிர்மதி கலங்க   தாவிக்
    கனவேகமாகவரு மயில் மீதிலங்க
மேலாகி விளையாடுமெய்யா   வெற்றி
    வேலாயுதங்கை யெடுத்த முருகையா
சாலோகசாமீப மென்னும்   சுவாமி
    சாரூபசாயுச்சிய பதவியிலே மூன்றும்
ஆகவே நின்பாத நாதா   என்னை
    ஆதரித்தாளவே வேணுங்குருநாதா
தாகமாயிருக்கு துனைக்காண   வந்த
    சுவாமி வருவாயெனது கண்ணெதிரே தோண
அரகராவேலனே நமாவோம்   சுவாமி
    ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம்
அரகராமுருகா நமாவோம்   வாலை
    யம்பிகைபராசத்தி மைந்தா நமாவோம்
அரகராகுகனே நமாவோம்   சுவாமி
    அன்பருக்கன்பான பொருளே நமாவோம்
அரகராதேவா நமாவோம்   சுவாமி
    அகிலபுவனத்திலும் நிறைந்தாய் நமாவோம்
மயிலேறுமொயிலா நமாவோம்   பொதிகை
    மலைமேவுந் தமிழ்முனிவன் குருவேநமாவோம்
மயிலேறும் கந்தா நமாவோம் வட்ட
    வடவாலில் மேவுமால்மருகா நமாவோம்

மயிலேறும்நாதா நமாவோம் சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம்
மயிலேறுகின்றாய் நமாவோம் தங்க
வடிவானவேலது வுகந்தாய் நமாவோம்
திரிபுரபவாவா நமாவோம் குக
தேசிகாபவனெளி பவாவாநமாவோம்
பரிபுரபவாவா நமாவோம் வள்ளி
பாகனேபவனெளி பவாவாநமாவோம்
சரவணபவாவா நமாவோம் கந்த
சுவாமியேசயலொழி பவாவாநமாவோம்
தருமதுரையே நீரு மென்னை நல்ல
தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னை
காவுமுன்சேவடிகள் தன்னை இங்கு
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னை
வாவென்றுசொல்லமன மிலையோ உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ
தஞ்சமென்றேனே உனக்கு எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு
அஞ்சறிவுமானதாயகனே சுவாமி
அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனே
உன்கிருபை தந்துமே கண்பாரும் இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும்
அன்புபெறுந் தேவர்களைப்போலே உன்
னடியேனைக் காப்பாற்றி ஆண்டதினாலே
புவனமகில்கதிரைக்குச்சென்றேன் நல்ல
புண்யவடிவேலவனைத் தொழுதுமேநின்றேன்
எவன்றேடினாலுந் தேடட்டும் நமக்
கென்சொல்லிக கவிபாடினாலும் பாடட்டும்
நமக்கென்னவென்றிருக்கிறீரோ சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ
உமக்குமனமிரங்காததேது எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாவிப்போது
ஐயா நீ கிருபைசெய்தாலே இந்த
அகிலாண்ட கோடிபூ மண்டலத்தின்மேலே

மெய்யான சரிதையிலனேகர் அதற்கு
மேலானகிருபையி லிருப்பவரனேகர்
தவயோகக்காரர் வெகுவெள்ளம் அங்கு
தங்கியிருப் பவர்களோ மகாகோடிவெள்ளம்
அவர்களைப்போல் நான்பிறந்ததில்லையோ சுவாமிக்
காளாகவெனக்குவிதி யயனெழுதவில்லையோ
அன்னையவளீன்றெடுத்த கெதியோ எனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ
என்னகுறையிருந்தாலுந் தீர்த்து உந்தன்
இணையடிக்காளாக வென்னையுமேசேர்த்து
ஆளாக்கியாளலாகாதோ எந்த
னகந்தனிலே நீயிருந்துவாழலாகாதோ
பாழான மனங்குவியு தில்லையோ என்ன
பாவமோ அதிலிருக்கும் பிசகுதெரியலையோ
வஞ்சகமில்லாமலே கண்பாரும் முடிவில்
மறலியுட தூதரென்னை வருத்தமாற்பாரும்
அஞ்சுதலையாருளுந் துரையே உமக்கு
அஞ்சுதலையாய்வேத னிருந்ததுவுஞ்சரியே
ஆறுதலை கண்டவுடனையா பின்பு
ஆறுதலையாய்ப்பதியை யாண்டவரேமெய்யா
ஆறுபடை வீட்டுக்கதிகாரா வந்த
அசுரருடனஞ்சாத போர்புரியும்வீரா
சத்தியுமை பாலகனேசாமி உந்தன்
தாசனுக்குத் தாசனெனைக் காப்பதேநேமி
சுத்தபரி பூரணுவுன்னை ஓதி
துதிக்குமடி யார்க்குமடி யாகவருளென்னை
பொய்யாதவாழ்வருள வாவா இன்று
ஐயாவேயெனையாளுந் தேவாதிதேவா
ஒய்யாரமான முருகோனே வந்த
உற்பவமெனுந்துதியை செப்புவேனுனே
உரமான வசுரரிடராலே தேவ
ரோடிமுறை யிட்டாரே கைலைமலைமேலே
அரனசுரர் மேற்கோபமாகிக் கைலைக்
யாளிவிழி தனிலேயொரு பொறி சிதறியேகி

கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு.

சரவணப் பொய்கையிலமர்ந்து அதுவுஞ்
சந்திரோதயம்போலே பாலனெனவந்து
உருவாகியலர்மீதி லானுர் எங்கள்
ஓம் நமசி வாயனெனும் பரமன்மகனுனுர்
அப்பவே சென்னியோ ராருய் மெத்த
வழகான செந்திரு புயங்களீராருய்
உற்பவயான பனிரண்டு விழிகள்
ஒளிவாகி யோராறு பெண்கள்பா லுண்டு
அயனையுஞ்சிறையினில் விடுத்தாய் எந்தன்
அரனுருக்கு பதேசஞ் சொல்லியே கொடுத்தாய்
கயமுகா சூரன் முதலோரை கந்தன்
கைவேலி னுலவர்கள் கருவறுத்தாரே
தங்கவடி வேலலங்காரன் மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன்
தென்கதிரை மாநக ரிலங்கும் சுவாமி
சிங்காரமா யுனது வருள்கிருபை பொங்கும்
சித்தமு மகிழ்ந்துவ நம் லோலன் வள்ளி
தெய்வானைக்கிணையான சித்திரமயில் வேலன்
சத்திவேலாயுதமு முடையான் பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான்
கடகமெனு மானதிங்களிலே எங்கள்
கதிரேசன் திருவிழாப் பவனிவருகையிலே
கடல்போலே பேரிகை முழங்க விருது
கட்டியமிருபுறமு மருகே துலங்க
செங்காவிப்பட்டாலே கோடிக் கொடிகள்
ஜெண்டாவுமாலவட்டக் குடைகள் பலகோடி
மங்காத சாமரைகள் கோடி வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி
சேர்க்கையாய் முரசுசங் கூத நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத
பார்க்க வெகு மாமுனிவர் வரவே கவிகள்
பாடியே யரகரா வென்றுபுகழ்பெறவே
ஆணிப்பொன் மாலைகளிலங்க மெய்த்த
அழகான வாலாத்தி தீபமே துலங்க

மாணிக்கப்பேழையி லுகந்தார் கந்தன்
மதயானை மேலேறி பவனியேவந்தார்
மதகரிகள் வருகிறதைப்பாரும் சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும் கோரும்
கதிர்காமத் திருவிழா நேர்த்தி எங்கள்
கந்தனுக்குகந்ததிரு வாபாணஞ்சாத்தி
கரியுலவு வனமூடு சென்று செல்வக்
கதிர்காமந் தன்னிலே நீராறுப்பென்று
சரியான பௌரணையை நாடி கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி
வாரிபோல் பெருகிநீ ரோடி வார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி
கூரான வடிவேலெடுத்து எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயடுத்து
புள்ளிமயில் வேலர்விரைவாக சென்று
பூவையெனுங் குறமாதுகோவிலுக்குள்ளேக
வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு வாரு
மணவாளரென்றடி பணிந்தன்புகொண்டு
சித்திரமணி மலரணையில் தாவி நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திவர்கள் மேவி
கொத்துமுத்துநத்துவளை திருத்தி யிவர்கள்
குளிர்ந்தகம வாசனைகள்மேலெங்கும்பொருத்தி
இங்கிர்த மணுளகுண நீதா யெனக்கு
இனியசுகபோகமத லீலாவினோதா
எங்கள் குலம் விளங்கவந்த நேசா சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்த விசுவாசா
அத்தைபெற்ற மூத்தேயெங்கோனே யென்ற
ஆரணங்கையுபசரித்த தேனேபெம்மானே
முத்திரையிட்டிலங்கு கொங்கையாலே வள்ளி
மோகனமேயென்றந்த வேலவர்கையாலே
கலந்தணைத்த சுகந்தமண வாசன் எங்கள்
கட்டழகிவள்ளிதனை பார்த்துமதபோஜன்
சலதரத்தைப் பழித்தகுழ லாளே இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவ நுதலாளே

கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு.

எந்தனுக்கிசைந்த மனையாளே வள்ளி
இந்திரன்மகள்தெய்வானைக் குகந்ததுணையாளே
வந்துவெகுநேரமாச்சுபோடி யெந்தன்
மாதுதெய்வானையெனைத் தேடுவாள் நாடி
போய்வாரேன்விடை தாடியென்ன வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன
வாய்ச்சம்பிர தாயமெவெகு வீச்சு நான்
மகிழ்வாகப் போய்வாரமென்று சொன்னபேச்சு
அங்கேபோய் செலுத்துமதிகாரம் யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம்
இங்கிரண்டு நாளிருந்துபோனால் சுவாமி
என்னகுறை வாகிவிடுங்காணு மும்மக்கானல்
என்னிடத்திலிருக்கையிலே யவளும் உம்மை
யேன்தேடவேண்டியது காரணங்கள்புகலும்
உண்மையெனக் கின்னதென்றுதானே சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளிபெண்மானே
இங்கேவந்துநானி நப்பதாலே யென்னை
யெங்கேயோ வென்றுதெய் வானையொருக்காலே
மங்கையருந் தேடுவா ளின்று ஆசை
வள்ளிநீவிடைதாடி போய்வாறெ னென்று
இவர்கூற வள்ளிமுன்னுளே சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளை
அவசரமாய்ப்போவ தென்னவங்கே சுவாமி
ஆனாலு நீர்போகச் சம்மதியே னிங்கே
கூடாது உம்மைவிடமாட்டேன் மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன்
தேடியிங்கே தெய்வானைவரட்டு மென்று
செப்பிவிட்டு எத்தனைபேர் வந்தால்வரட்டும்
பார்த்தே தடிவள்ளிமானே சற்றும்
பாரம லிம்மொழிக ளேன்சொல்லுவானே
ஆத்திர முனக்கென்ன போடி தெய்
வானைக்கு நிகராவரோ பெண்கள்கோடி
சொந்தமாய் கிருடைபாராட்டி அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி.

வந்தபடியாலவ ளுனக்கு முந்தி
வந்தவளுமானதால் நானுமவளுக்கு
அடக்கமா யிருப்பது சிலாக்கியம் வள்ளி
யானாலுமில்லறத்துக் கதுதானே யோக்கியம்
மடற்கொடி தெய்வானைக்கு இங்கே நானும்
வந்தவகைதெரியாது தேடுவாளங்கே
போகவிடைதாவென வதட்ட யெங்கள்
பூவையெனுங்குறமாதுவிதியோ டதட்ட
மாகனகமேடையி லிலங்கும் உமது
மனையாளுமுத்தகுடி யாளெனவிளங்கும்
தெய்வானைசொந்தமாய்ப் போச்சோ நானுந்
திருட்டுத்தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ
கைமாயஞ்செய்தோமோ நாங்கள் ஒருவர்
காணுமல்மாலையிட்டு வந்தீரோ நீங்கள்
சாதியா ரேசுவாரோகாண் நீருந்
தலைமறைபயென்மனைக்கி வந்தாயோ நீதான்
ஆதியிலேயெந்தனை நினைத்து வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து
கூட்டிவந்த நாரதரைக்கேளும் வனத்தில்
குளத்தருகி லேமிகுந்த யானைபுலிவாழும்
காட்டினிலுமக்குதவிசெய்தார் உங்கள்
கணபதியைக்கேட்டாலுஞ் சொல்வாரேயெய்தான்
சிவதலங்கள் செய்சபைமுன்னுலே வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினுலே
அவள்மாத்திரஞ் சொந்தக் கிளேயோ சுவாமி
ஆனாலும் நான்கிழக்கு முகமிருக்கவிலையோ
வள்ளியிவைசொல்லவே திகைத்து சென்னல்
வளமானதென்கதிரை வேலனும் நகைத்து
கள்ளிபோல்வீணிற்கத்தாதே பொல்லாக்
கசடானகுறவருட சாதியொளியாதே
இரண்டுசமு சாரமாகாது யென்று
இன்னிலத்திற் சொல்லுவது சரியானதோது
திரண்டதொருவள்ளியுனை நாடி வந்த
செல்வனெனன் றறியாமல் பேசலாமோடி

தில்லுநான்போய்வாரே னென்று சொன்ன
நினைவறிந்து வள்ளியவள் சாமியெதிர் நின்று
வல்லபழுமக்கென்ன காணும் எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும்
என்சமர்த்தைப்பாருமினியென்றே சுவாமி
இடைதனிலேசேலையை யிருக்கியெதிர்கொண்டே
அன்புறநெருங்குவது கண்டார் நீ
அப்பாலே நில்லிப்போ சொல்லுகிறேனென்றார்
சொல்கிற சமாச்சார மென்ன உமது
தொழிலைத் தானெடுகிலு மறிந்துமினியென்ன
நல்லதினி மேற்கொண்டுபார்ப்போம் உமது
ஞாயமதைதேவசபை சொல்லியேகேழ்ப்போம்
தேவசபை சொல்லியேபாரு அவர்க்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு
ஓவியமோ உன்னுறுதிகேட்க யெழுதும்
உடன்படிக்கைமுறியுண்டோ கொண்டாடிப்பார்க்க
உடன்படிக்கை முறியெழுதித் தாறேன் சுவாமி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாரேன்
கடக்கவென்னைத் தள்ளாதேதானே யென்று
கட்டிமுத்தமிட்டது கசப்பேறுவானே
தனியேவனத்திலிருபேருங் கூடுஞ்
சையோகவேளையிலே பார்த்தென்னை நீரும்
இனியசெந்தேனோகற்கண்டோ உந்த
னிதழ்கொண்டுசொன்னதுவுமில்லையோவுண்டோ
முன்னிருந்தயினிப்பென்ன போச்சோ யிப்போ
மூத்தகுடியாளுமக்குச் சர்க்கரைபோலாச்சோ
என்னைநீர் வசைசொல்வதேனோ சுவாமி
யென்குலத்தைநீரிகழ்ந்து பேசுவதுயேனோ
தந்தையுங்கள் தேட்டையெடுத்தாரோ எங்கள்
சாதியார்வந்துநிதந் தின்றுகெடுத்தாரோ
எந்தனுற்குறையேதுமுண்டோ சுவாமி
இழுக்கெந்தசாதியிலு மில்லாததுண்டோ
மங்களகல்யாணமதில் நல்லாள் அந்த
மணவறையிலென்தகப்பனிட்டநகையல்லால்

உங்களிடம்வந்த நாட்கொண்டே யெனக்கு
ருத்திராட்சவடத்தை விட வேறுகெதியுண்டோ
மாதிவை யுரைக்கழுத்தையன் வள்ளி
மங்கைதனைப்பார்த்தேது சொல்லுவார்மெய்யன்
ஏதடி நீபேச்சதிகங் கொண்டாய் வள்ளி
யென்னுடையசாதியி லிழுக்கென்னகண்டாய்
குபேரன்மகள்போலப் பேசாதே உன்னப்பன்
கொடுத்துவிட்டவரிசைகளை வெளியேசொல்லாதே
சபையார்களென்னவறியாரோ யிந்த
தாரணியிலுள்ளவர்களெவருமறியாரோ
உடுத்திவந்ததுணிக்கிவேறுண்டோ களிப்பு
ஊருமேலைக்கு விட வேறுகதியுண்டோ
தொடுத்திருந்தகருதுமணியோடே யென்னை
தொடர்ந்துவரும்போதுனக்கு யேதுபட்டாடை
வண்ணார்கள் வெளுக்காதகலையுஞ் சுத்த
வாணிபர்கள் யெண்ணெயிட் டறியாததலையும்
புண்ணுக்குபோலிருக்கு மேலுங் காட்டில்
புரண்டுசெடி முள்ளிழுத்து சுரண்டிவிட்டகாலும்
எப்போதுங்காய்கிழங்கை தின்று நீயும்
இருந்தகெதி தெரியாகோவருப்போது அன்று
அப்பவேநானழைத்துக்கனிந்து நல்ல
வாபரணமானதையு மழகாயணிந்து
செம்பவளமாளிகையமைத்து உனக்கு
செங்கமலத்தாதிகளை யேவல்நேமித்து
நம்பிநான்செய்ததைமறந்து வள்ளி
நாயகியேபேசுவது மென்னடியிகழ்ந்து
மாதே நீபதராதேவாடி யெந்தன்
மனமுமேகலங்கிடச் சொல்லாதேபோடி
தோகையே யிதுவென்னமூர்க்கம் உங்கள்
தொளிலறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம்
சாராயங்கள்ளுகள் குடித்து குறவர்
சந்திக்குச் சந்தியேசண்டைகள் பிடித்து வி
பூராயம்தெரியாமற்கத்தி கண்ட
பூனையென்றறியாமல் முசலென்று குத்தி

சம்பமாய்ப்பேசுவதுமாக குறவர்
சாதியிலே நீபழகி வந்தவைபோக
செப்பவள வாயாளே யென்று சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங்கொண்டு
விண்ணணம்பேசுவது சீபோ சுடலை
மீதிலெலும்பான துவை தின்றதுவுமாரோ
கண்ணப்பனெச்சிதிங் கலையோ பிள்ளைக்
கறிதிங்கப்பாலகனைப் கொன்றதுவுமில்லையோ
புத்தியுமக்கில்லாதேபோமோ கெட்ட
புனக்குறவர்பெண்ணை நீர் சம்மதிக்கலாமோ
எத்திசையும் புகழ்பெற்ற நாதா வென்று
யிவள்சொல்லும் வசைகண்டு கூறுவார்தோதா
அடந்தேருவார் போதைமிகுந்தால் குறவர்
அவர்தனக்கே சிலவுக்கில்லா தோயிருந்தால்
கடன்வாங்குவார்சம்மதித்து தாலி
கட்டியதோர்பெண்டுகளை யீடாகவைத்து
குடுத்துவிட்ட பணத்துக்கீடாக வைத்த
குறத்திகளைப்பணங்கொடுத்த குறவன்வெகுவாக
அடுத்தவளையனுதினமுங்கூடி யிவர்கள்
அஞ்சாறுபிள்ளைகளைப் பெற்றபின்பு தேடி
பணங்குடுத்துத் திருப்புகிற போது பெற்ற
பாலரையுங்கூடவே கூட்டியவள்மாது
குணமாக முன்னீடுவைத்த பழைய
குறவருடன்போவதுங்கள் சாதியிலேமெத்த
இதுபுதுமையிவ்வுலகிலுண்டோ வள்ளி
யேந்திழையேயிதைவிடவேர்லெச்சைகளுமுண்டோ
கதிகொண்டமயில்வாகனத்தான் இந்தக்
கதைசொல்லவே மார்புடைத்ததனத்தாள்
குறத்தியென்று யெனக்குவசை புரியும் நல்ல
[illegible]ம்பமுனியாலுங்கள்சேதியெலாந் தெரியும்
மந்தி[illegible]ரா நீரறிந்திலையோ யீசன்
[illegible]லவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலையோ
சி[illegible] த்மகிழ்ந்தொருபெண் தூக்கி உங்கள்
சிவன்தலையில்வைத்துமே சுமந்ததைப்போக்கி

நந்திகேஸ்பரர் சொல்லக்கேட்டேன் சுவாமி
ஞாயநிசமில்லாமல் நான்சொல்லமாட்டேன்
ஆட்டுக்காலதுதயெடுத்தார் உங்க
ளப்பனையவனிமுழு தெங்கும்பழித்தார்
கேட்டுப்பாருமக்குத் தெரியாயோ ஒற்றை
மாட்டுக்காரனை வைத்திருந்த தறியாயோ
அண்ணனும்விநாயகரின்நேர்த்தி சும்மா
பெண்ணசை கொண்டல்லோ வந்தபகீர்த்தி
பெண்ணொருவர்கொடுக்காதததினால் அண்ணன்
பெருவயறுகொண்டுவழிக் கரையிலிருந்ததினால்
அண்ணனுமே மத்தளங்கொட்ட சொந்த
அருமை மருமகனின்று கைத்தாளந் தட்ட
விண்ணவர்கள் கூடியே நகைக்க வந்த
வேதியரும் மாதவருங் கண்டுபிர்மிக்க
தேவடியாள் போலு முந்தனன்னை கூடுந்
தேவசபைதனில் நின்று ஆடலையோமுன்னை
பாவலருக்கருள் புரியுஞ்சீலா யிதையும்
பார்த்தவர்கள் சிறியாரோ தங்க வடிவேலா
பத்மாசூரற்கு மிகப்பயந்து உங்கள்
பரமசிவனோடலையோ காட்டுவழி நுழைந்து
கைப்பொருளு மில்லாததேகி யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவயோகி
கும்பமுனிசொன்னரேநேரே யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே
தென்பாக வேமோக வள்ளி யிந்த
சீமையிலேதிருடிவருங் குறவர்குலக் கள்ளி
குதிகொண்ட வனக்குறவர் சாதி வகையின்
கூறறிந்துசொல்லுகிறகுறவர்குலச்சேதி
சதிர்பெருகுந் திருவிழாக் கடையில் ஜனங்கள்
சந்தடிகளாகவே சயனிக்குமிடையில்
கூசாமல் கூடவேபடுத்து தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து
பேசாம லோடுவதுகண்டு அப்போ
பெரியதனக்காரர்களுமேபிடித்துக்கொண்டு

வம்பிலே தலைமயிரைக்கட்டி கையில்
வகைபாக போடுவார் சொல்லென்று கிட்டி
செம்பாணிகொண்டுமே குத்தி அவர்கள்
சேலையையுரிந்துசின மாகவே நிறுத்தி
அடிதண்டமாகவே யடிப்பார் குறவர்
அப்பவுமெடுக்கவில்லை யென்றுமே துடிப்பார்
படியடிக்கி யலையாத சாதி குறவர்
பாசாங்கைக் கேட்டாக்கால் தெரியுமவர் சேதி
என்றிவ ருரைக்கவுமே மாது சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வாளப்போது
தொண்டர் தொழு கின்றமயிலேறுஞ் சுவாமி
சொல்லுவேனுங்கள்குல வளமைகளைப்பாரும்
அடையாளஞ் சொல்லுகிறேன் கேளும் நல்ல
ஆவினங் கூடிவரு மாய்ப்பாடிவாழும்
இடையருட வீட்டிலென் னாளும் மாமன்
இருந்து வெண்ணைதிருடியே உண்டாரே கேளும்
அன்றுடன சோதையறிந்து வந்த
ஆவினங்கள் கட்டுகின்ற கயிறால் வரிந்து
ஒன்றாக மாதவொரு பக்கங் கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னாலும் வெட்கம்
கட்டுண்டதும் ரோஷமில்லையோ பெணகள்
கட்டியசேலைகளைக் களவாண்டதில்லையோ
வெட்டிய சமர்க்களத்திலேறும் கிருஷ்ணன்
விஜயனுட குதிரைகளை மேய்க்கலையோ பாரும்
ஊத்துகிற கஞ்சிகளையேத்தார் கிருஷ்ணன்
ஊர்க்காலி யாட்டையெல்லாங் கட்டியங்கேமேய்த்தார்
கூத்ததிக முண்டின்னம்மெம்ப சொல்லக்
கூசுதேயென்மனமுமென்றவளியம்ப
கேட்டவடிவேலவர்கை நீட்டி வள்ளி
கேளடியுங்களுட வீடுமலைநாட்டில்
நீட்டியிருகால்களை நிறுத்தி அதனில்
நெட்டுநெட்டாகவளை கூட்டியே பொருத்தி
நத்திய கயிற்றால் வரிந்து மழைக்கு
நனையாமல் புல்போட்டு குடிசைகள் புரிந்து

குறம்பாடிக்கஞ்சிகளை வாங்கும் உங்கள்
குறவருடபாக்கியெல்லாங் கூரையிலே தூங்கும்
வரம்பேதுமில்லையென்னாளும் மென்று
வடிவேலர்சொல்லவே வள்ளிமின்னாளும்

தமக்கென்றுசிறுகுடிசைகட்டி குறவர்
தானிருந்தார்களேவசை யில்லாக்கெட்டி
உமக்கொருதலத்தினிலும்நாடி சுவாமி
ஒண்டயிடமில்லாமல் மலைக்குமலையோடி

கையிலரைக்காசுமேயில்லாமல் வீடு
கட்டியேகுடியிருக்க வகையுமறியாமல்
வெய்யலிலும்வேனலிலுங்காய்ந்து சுவாமி
மெத்தவருஷித்தமழை பனியால்நனைந்து

இருப்பதுவைக்கண்டுமனப்வாடி உமக்கு
யிவ்வுலகிலுள்ளவர்களெல்லோருங்கூடி
சிறக்கவேகோவில்களமைத்து உமக்கு
செம்பொன்மணியாபரணம் விருதுகள்சமைத்து

வடிவேலவாவென்றுயெண்ணி உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிதிரஷ்டைபண்ணி
அடியவர்கள்புண்ணியமிதையா நீரும்
அழகானகோவில்களி லிருக்குகிறதுய்யா

தேருமதகரிபரியுமிரவல் உமக்கு
ஜெயமேளபேரிகையுங் கோயில்களுமிரவல்
ஏறுமயில்வாகனமுமிரவல் உமக்கு
இட்டநவரத்தினமணி யாபரணமிரவல்

உற்றதொருபந்துக் களைத்தானே நீ
ஒருபோது மெண்ணாமல் பழிக்குநீர்வீனே
வெற்றிவேலதுதானேசொந்தம் உமக்கு
வேறேயொருஆஸ்திகளின் யேலென்னதொந்தம்

ஆத்தாளோ பாளுருப்பறற்சி அவளுக்
கருமையுள்ள தமையனையும் வளர்த்தவளுமிடைச்சி
தந்தையோமின்காரப்பரவன் உமக்கு
தளகர்த்தனானவனும் நல்லகுலமறவன்

அானுரென் றுமையீன்றதய்யா சங்கம
 ஆண்டியல்லோ சாதியிலே சொல்வார்கள்மெய்யா
வரமுறைகளில்லாத நாட்டம் உங்கள்
 வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம்

இதற்குமுன்னே நானறிந்தாலும் உமக்கு
 இசைவேனே நீர்குட்டிக் கரணம்போட்டாலும்
அதற்கென்ன செய்யலாமய்யா நாங்க
 ளானுலுங்குறசாதி யென்பதுவும் பொய்யா

பண்டாரம் நானென்றுகத்தி யெந்தன்
 பரணெதிரே வந்தீரே யதுவென்னபுத்தி
கொண்டுசலம் பேசுவது மதியோ சுவாமி
 கொய்ததினைமாவுக்கென்னை கெஞ்சினதும் விதியோ

பேருதெரியாமலுருமாறி வந்து
 பிசகுசெய்தமதகரியினுலேமதமீறி
பாரமத யானை வராவிட்டால் உமது
 பாசாங்குக்குள்ளாக மாட்டேனில்லாவிட்டால்

வழகியிந் தாடிகுற வஞ்சி யென்று
 வனவேடன் போல்வந்து யென்னெதிரேகெஞ்சி
களையாகு தெனவந்து முட்டி நீரும்
 காரியங்கள் கொண்டபின் பேசுகிறீர் கெட்டி

வலிய நான்வந்தேனே தொட்டு நீரும்
 வஞ்சகம் பேசுகிறீ ரிதுவெல்லாம்விட்டு
சலியாமல நீறுருதிசொன்ன மொழிகள்
 தவறுவரோ கலிகாலமானுலுமென்ன

பொன்னடி துலங்கிய யென்மாமி பெற்ற
 புண்ணியனேயனுதினமு மகலாமல்சாமி
என்னருகி லிருமென்றுகேட்டால் சுவாமி
 யென்குலத்தை நீர்பழிக்க யுமக்குவிளையாட்டா

வையகத்துக் கோர்க்காது யென்னை நீரும்
 வஞ்சகமாய்வாயிழந்து பேசுவதுஎன்னே
தெய்வானையோ சொல்லமாட்டாள் எந்த
 சிறிக்கியோஇவ்வளவு சூதுசொல்லி போட்டாள்

எப்படியோ நானறியவில்லை லோக
மெங்கும் நீரபோகாத விடமொன்றுமில்லை
இப்படியு மருந்திட்டதாரு உமக்கு
யேலாதோ சொல்லவந்த மங்கையர்கள்பேரு

வருந்திவிருந் தளித்தவளைச்சொல்லும் அவளை
மயிர்பிடித்துவ நுகிறேன் சற்றேயிங்கேநில்லும்
மருந்திடு மயக்கமில்லா விட்டால் பதில்
வார்த்தைசொல்லமாட்டீரே நானெதுவுங்கேட்டால்

முருக்குவளை தாதிகளே வாடி நம்ம
முத்துலிங்கசுவாமியை நீ கூட்டிவாபோடி
கருதுமருந் திடுபிசகு தோணும் எந்தன்
கணவனெனுங் கந்தருக்கு கைபார்க்கவேணும்

மின்னாரே யென்றிவளுஞ் சொல்ல யெங்கள்
வேலரிது புதுமையெனக் கேட்டவரும்நல்ல
என்னடிவீண்யோசனைகள் கொண்டாய் நானும்
எவள்வீட்டிலே யிருந்துண்பதை நீகண்டாய்

என்னுடைய சொல்லுறுதிமீறி நீயும்
எதிர்பேசினதினாலே யுன்னை நான்சிறி
சொன்னவகை யல்லாது கண்ணே சும்மா
தோகையேநானுமுனை பேசுவேனோபெண்ணே

மயங்காதே நீவள்ளிமாதே உந்தன்
மனமறிய நான்சொன்ன தல்லாதிப்போதே
ஜெயமாகநான்போயி வருவேன் வள்ளி
தினமுமுனைப்பிரியாமல் தெரிசனமுந்தருவேன்

தெய்வானைகந்தனைத்தேடுதல்.

உந்தனைவிட் டகல்வேனோ மானே யென்று
வுபசாரஞ் செய்தங்கி ருக்கையிலே தானே
கந்தனையும் கோவிலுக்குள் தேடி அங்கே
காணமல் தெய்வானை யம்மன்மனம் வாடி

மங்கையரே சுந்தரப்பிரகாசன் அந்த
மாணிக்க கெங்கைக்கு போன முருகேசன்

எங்கேயென்று வேலவரைத் தேடி நீங்க
ளிது நிமிஷம் வரவேணும் மென்னிடமேயோடி
தாதியர்களெல்லோருஞ் சென்று யெங்கள்
சண்முகவேலாயுதனைத் தேடியேயின்று
ஆதிசிவ மாணிக்க கெங்கை தீர்த்த
மாடவந்தவேலவரைக் கண்டீரோயிங்கே

காணிக்கை கொண்டுவந்தோரே எங்கள்
கட்டழகி தெய்வானை மணவாளனுரே
மாணிக்க கெங்கை நீராட யிங்கு
வந்தவரைக்காணீர்களோ யினியெங்கேதேட

பாங்கியர்கள் நதியெங்குந்தேடி கோவில்
பணிவிடைக் காரர்தெரு வீதிவழிநாடி
ஏங்கியவர் தேடுவது கண்டு சுவாமி
யெங்கோனுஞ்சிந்தையி லறிந்தன்புகொண்டு

தெய்வானை தேடினதை சுவாமியறிதல்

நினைவில் மறக்காததெய்வானை யிந்த
நிமிஷமே கூட்டிவா வென்றேவுஞ்சேனை
எனையழைக்க வேணுமென்று தேடி வாரார்
ஏந்திழையே நான்போயி வரவும் விடை தாடி

தாடியென்று சொல்லவே திகைத்து வள்ளி
தையலருஞ்சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து
தேடிவந்தபேர்களை நானடிப்பேன் அந்த
தெய்வானைவந்தாலுஞ் சண்டைகள்பிடிப்பேன்

என்னுடைய கணவனையுந்தேட அவளுக்
கென்ன வதிகாரம் விடை கேழ்க்குறீரோட
மன்னவா யிதுவென்ன வென்றே சொன்ன
வள்ளிதனையுபசாரஞ் செய்தருகில்நின்றே

யெனக்குறியமானே நீகோபம் இப்போ
யென்பேரில்வைக்காதே வீண்மனஸ்தாபம்
உனக்குநான் பிசகுசெய்வேனோ பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ

போய்வாரேன்வள்ளிதயவாக யெனக்கு
புகழ்ந்துவிடைகாடி தெய்வானையிடமேக
வாய்திறந்துசொல்லுமென மகிழ்ந்து யென்று
வடிவேலர் கேழ்க்கவே வள்ளியுமுகந்து

தெய்வானையிடம் சுப்பிரமணியர் போகுதல்

மறைபுகழு கின்றவடிவேலா சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சீலா
இறையவருக் குகந்தமகனுரே யென்று
யிவள்சொல்ல வேலர்வழி கூடிநடந்தாரே

சித்திரவடிவேலரும் நடந்தார் இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டடிபணிந்தார்
வெற்றிமயிலோனன்பு கொண்டு கோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று

மங்கையரே யெனைத்தேடுவானேன் நம்மள்
வள்ளியம்மைதன்னுடைய கோவிலுக்குபோனேன்
செங்கமலமாதேயென் கண்ணே யிப்போ
தேடினதுமென்னவகை சொல்லாயோ பெண்ணே

தெய்வானையப்போ துணிந்து அந்தச்
செவ்வேளின்பாத மலரடிதனைபணிந்து
வைபோகமான வடிவேலே உடைய
மணவாளா உமக்குநித மிதுதானுவேலை

இளையாள் மேலிருக்கிற பாசஞ் சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம்
அழையாத விருந்தோ நீர்களுனும் வள்ளி
யவளமனைக்குநிதம் வலியப்போகவோவேணும்

முழுக்கவே யும்மாலே யேச்சே சாதி
புறைதவறிக்குறவருட சம்மந்தமாச்சே
இழுக்கானசாதியினிலேகி பாலை
இட்டாலுமேன்மையது தருவாளோபோகி

அடிக்கடி நீரவள்மனைக்குப்போனுல் மெத்த
அலக்களிப்பாகவே நினைப்பாளேயானுல்

குடிதனிலுயர்ந்தவளுமில்லை வள்ளி
குறவர்குலமானதால் கேவலமென்சொல்லை

நிசமென்று நீரெண்ணுவீரோ உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுடமருந்தறிவீரோ
அசையாமலானந்தமீறி வள்ளி
ஆசைகொண்டுபேசுகிறீர் நானுமக்குப்பாரி

ஆகிநானேடுத்ததென்னகோட்டை புவியில்
அறியாரோநீயெனக்குத் தேடிவருந்தேட்டை
தேகியென்ஆண்டிபோலானீர் சுவாமி
தேவியவள்வள்ளிதினை மாவுதிங்கப்போனீர்

திரிபுவனையருள்பெற்ற பாலா உமது
சித்தமதுவெப்படியோ கதிரைவடிவேலா
அரிமருகரே யென்றுரைக்க யெங்க
ளாறுமுகன்சொல்லுவார் தெய்வானைமெய்க்க

மானேநான் உன்வருதிபெற்றேன் பின்பு
வள்ளிதனை மாலையிட்டுகூடடிவந்துவைத்தேன்
தேனேயென்மேற்பிழைகளில்லை உனக்கு
தெரியாதோ வீணில் பேசுவதுதொல்லை

கோவிலுக்கு நீபோடி யென்று யெங்கள்
குமரேசன் சிம்மாசனத்திலே சென்று
சேவலொருகையினிலிருக்க யெங்கள்
சித்திரவடிவேலவருமே கொலுவினிலிருக்க

புள்ளிமயில் வடிவேலும் வாழி யிந்தப்
புவியெங்கு நகரத்தார் புகழ்பெறவே வாழி
வள்ளி தெய்வானையுடன்மேவி யோக
வாழ்வு பெறுங் கதிரேச ரென்னாளும் வாழி.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

கதிர்காமவசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேற்சிந்துசொல்ல
சித்திவிநாயகனை யெண்ணியே வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே

சத்திசிவனருளுஞ் வெத்திவேலவர்மலர்த்
தாளிணைதன்னைமறவேனே கந்த
வேலவனுமெங்கள்முருகோனே

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன் குருவைப்பணிந்தேத்த வெகு
இன்பமுடனேகதைவாழ்த்த

இன்பமுடனேயொரு மன்புள்ளதோழியரே
யெங்கள்குலதேவனருள் சேரும் இந்த
தென்கதிர்காமமதைநீ பாரும்

தென்கதிர் காமமென்றால் யெங்கும்பிரகாசமாகச்
சேவல்கொடிதுலங்குதேதையா இந்த
மாவளமாநகரின் மீதையா

மாவளமானயிந்தப் பூநகர் தன்னிற்சுப்பிர
மணியர்க்கிசைந்ததொரு பெண்ணே வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
அந்தமதகரிமேல்ப் பாரையா மேவி
யந்தாபவனிவார தாரையா

அந்தாபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவருவோரடி தேவர்
சேனைசேனாதிபதி தானடி

சேனாதிபதியிவ ராணையேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும்லோலனே வெகு
அருமையாயீன்றவளார் வேலனே

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளே யெங்கள்பரமேஸ்வரி கைலை
காத்தாளே மங்கைமங்களேஸ்வரி

காத்தாளே செங்கைவேல னுத்தாளிவளென்றீரே
கயிலாசநாதர்க்கிவளாரடி யெனக்
கொயிலாக சொல்லுகின்ற சீரடி

ஓயிலாகயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிதன் சொந்தமனையாளடி வாலை
சத்திசிவனென்பார்களே கேளடி

சத்திசிவனையவர் பெற்றிடும் ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்னசீரையா சிவன்
ஏனவர்தன்னை யெரித்தாரையா

ஏனெரித்தாரென்றாயே மானையுடையவர்மேல்
யேதுக்குப்பாணம்மதையெய்தான் சிவன்
வாதுக்கனலாகவே செய்தான்

வாதுக்கெதிர்த்துவந்தபோது விஜயன்வில்லை
வாங்கிச்சிவனடித்த தேதடி அப்போ
தாங்கியருள்வாக்கு சொன்னதோதடி

தாங்கினதோர்தவத்தா லோங்கியபார்த்தனெனும்
தானேபொறுத்தருளும் சிந்தையார் இந்த
ஆனைமேல்வாறகந்தன் தந்தையார்

ஆனைமுகமும்பெரும் பானைவயறிலங்க
அந்தாயிருக்குராரே பாரையா ஒரு
தந்தமிலங்கியவராரையா

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்க்
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே வள்ளிக்
கினியகுமரன்தமையோன் கண்ணே

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிருந்தவரேதோனும் நல்ல
கல்வியிருந்தவரே காணும்
கல்வித்திரமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே வெகு
விந்தையாம்நாட்டுக்கோட்டையாருக்கே
நாட்டுக்கோட்டையாருக்கு நீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா யெங்கும்
சகலபேர்களுநம் சொல்வ தேதையா
சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமல்செய்துவந்த தேதினால் புவியி
லிவரேநகரத்தாரென் றோதினார்
இவர்களைப்போலனேகர் எவ்வளவோ தர்மங்கள்
ஏனையோர்காணுமந்த நாளிலே
தானவர்க் கந்தபே ரோதானில்லை
இனியகுமரனையுங்கனிவாய்வளர்த்தெடுத்த
ஈசனுக்குயிந்தப்பிள்ளை யேனோ நந்தி
வேஷ மெடுக்க விதிதானோ
வேஷமெடுக்கக்கண்டே ஏசியவள்ளியஞ்ச
வேலனுங் வள்ளியைக் கொண்டாடினார் ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினார்
தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருந்தகந்தன்
சங்கையில்லாமல் கெஞ்சிநேரே குற
மங்கையைக் கூட்டிக்கொஞ்சினாரோ
மங்கைகுறவருட சங்கையல்லடி பெண்ணே
வந்தபகவன் முனிவேண்டி ஆதி
சொந்தமாய்ப் பெற்றதிவள் தாண்டி
சொந்தமாய்வேலனுக்கு மிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோ மணமாலை திருப்
பூட்டவில்லையோ புவிமேலே
பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமணஞ்செய்தாரடி வேலன் ஆழி
வாமண்ணன் தங்கையருள் பாலன்

வாமணவேனுமஞ்செய்து தேமகமாலையிட்டு
வந்தவர்வட்டக்குடைமின்ன யிந்தத்
தந்திமேலேறிவார தென்ன
தந்தியிலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதான்டி கண்ணே சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே
இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
யிருபுறமும்ஜனங்களேந்தியே கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே
காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கற்பூரதீபமதை தூண்டி வாரூர்
சுப்பிரமணியனுக்கே தாண்டி
தாண்டியுபசரித்து வேண்டியதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா வேலே
சித்திரமானதிதைப் பாரையா
சித்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர் நகரத்தாரடி வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப் பாரடி
நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றாலவர்யாரு அவர்
புகழ்பெற்றிருப்பதெந்தவூரு
ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றாறு ராரடி வெகு
பாங்குள்ள நாட்டுக்கோட்டையாரடி
நாட்டுக்கோட்டையாரென்றால்வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா புகழ்
தீட்டும்நகரத்தார்கள்தானையா
தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமும் செய்ய
வந்தவர்களிவரென் னேரமும்
என்னேரமுங்கொழும்பில் சொர்ணயாபாரஞ்செய்ய
இந்தக்கதிர்காமத்தை நாடியே யிவர்
வந்ததென்ன திருப்புகழ்கள் பாடியே

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமாதப்
பௌரணைக்கேவருகுவாரடி யிங்கே
வருஷங்கள்தோறுமவெகு சீரடி
வருஷங்கள்தோறுமிங்கே வருவாராலுஞ்சொந்த
மானகாக்கேகிறைலப்போதுகாண் யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண்
ஆருகாணென்றாய் புகழேறும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத்தார்கள் வெகு
சேகாமாகவருவார்கள்
பேர்புகழ்நாட்டுக்கோட்டைச் சாதிகளென்றபேரு
பெற்றதினல் நகரத்தாரே யென்று
யெத்தலத்திலுமுறைத்தாரே
எத்தலத்திலும் பெற்றமதுரைச்சொக்கேசரங்கு
இருக்குங்கோயிலெயெல்லாந் தானையா பொன்னல்
சிறக்கவலங்கரித்த தாரையா
ஆரென்றாய்பெண்ணே யெங்கும்பேரானதென்மதுரை
ஆலயத்தைப்புதிப்பித்த தாரடி வடி
வேலனருள் நகரத் தாரடி
வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பா முந்தானையா பதி
யாவும் புதிப்பிக்கிற தாரையா
புதிப்பிக்கவேணுமென்றுமதிப்பித்துகந்துசெய்தார்
புவியிற் புகழ்நகரத் தாரடி முகில்கள்
குவியும்தன்மைபோல்கொடை யாரடி
கொடையார்கள்தர்மம்செய்யசடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்விலோர் புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர்
நாடுமெயோத்திகாசி ராமேஸவரம்வரைக்கும்
நகரத்தார் தர்மம் நிலைநாட்டினர் நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினர்
சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேற்
சொன்னகவியெங் குப்பிரகாசம் ஓகோ
மன்னவரேஉமக்கெந்ததேசம்

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்ய
சீமான் திருப்புல்லாணி தானடி தங்கம்
ராமசாமியென்பது நானடி

நானடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினங்களெப்பக்காணும் அதைச்
சொல்லநாமிங்கேவரவேணும்

சொல்லக்கேள் சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்கித் தானடி வந்தால்
பாதகங்கள்தானகன்று போமடி

பாதகந்தன்னைப்பரி காரமேசெய்யுங்கந்தன்
பாதந்தன்னைப்பணிய வேணும் நாங்கள்
காதல்கொண்டே வருவோம் காணும்

காணுந்தவமிகுந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி

வாகன்செந்தூரனென்றால் வையாபுரிப்பழனி
மாமலைமேலிருப்பதாரு நல்ல
சாமிமலைக்குகந்த தாரு

சாமிமலைமுதலாய் பூமிதனிலெயுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி

சித்தம்வைத்திருப்பது முக்தரெனுமடியார்
சிந்தைதனைவிட்டகல மாட்டார் மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார்

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில் செல்வாரே நாமும்
கேட்டவரங்கள்தரு வாரே

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழி யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி

கதிர்காமவெசல் முற்றிற்று.

உ

சிவமயம்.

கதிர்காமக் கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும் நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
பார்புகழுங்கதி ரேசனின்மே லெங்கள்
பண்புடன் கொண்டாடும் வாசனின்மேல்

மங்களஞ்சேருங் கும்மிப்பாட வந்து
மாணிக்க வேலன்மேற் றன்பாட
சிங்கத்திலேறிய பூரணியே யெந்தன்
செந்தமிழ்க்கேயருள் தாரணியே

சுந்தர நீரணி ஆறுமுகன் மீதிற்
சொல்லுந் தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவேளையேற்றிக் கவி
செப்பும் புலவர்களைப் போற்றி

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக் கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்ய வேணுமம்மா நானும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா

மங்கையரெல்லோரும் வாருங்கடி யிந்த
மாணிக்கக் கெங்கை நீராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டுங்கடி முகம்
சிறந்த குங்குமந் தீட்டுங்கடி

கூந்தலுக்கேமலர் மாலைகட்டி நல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சாந்தமதாகவே பாடுங்கடி கந்தன்
தாளதைப்போற்றிக்கொண் டாடுங்கடி

ஆயிழையே நீங்கள் நாடிவந்த யிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
சேயிழைமார்களே வாருங்கடி கவிச்
சிறப்பைச் சொல்லுவேன் கேளுங்கடி

ஓதியசெந்தமிழ்ப் பாடிடவே யிந்த
ஊர்வளம் பார்த்துக் கொண்டாடிடவே
ஏதுபிழைக ளிருந்தாலும் சுவாமி
யேழைக்கிரங்கி யெனையாளும்

ஆறுமுகனென்று பேருடையான் னெனை
யாளுங்கதிர்காம ஊருடையான்
சீருடையான்வடி வேலுடையான் வெகு
சித்தர்கள்போற்றிய சீருடையான்

வாசம்புகழ்கதிர் காமத்திலே மழை
மாரிபெய்யவுஞ் சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேதத்தினர் சென்னல்
யாவும்விளைகின்ற நீதத்தினால்

சென்னெல்களெல்லாம் விளைந்திருக்கு மெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் பூத்தீனும் பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோனும்

கானகத்தில்மயில் ரொம்பவடி புலி
கரடிமான்மறை கும்பலடி
வானரங்கள்விளை யாடுவது மெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும்

மாணிக்கக்கெங்கையா ரோடுவதும் நித்தம்
மாதவர்வந்து நீராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரே கதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே

வீதியலங்கார மெத்தவடி யிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி

சோதிமயமான கோபுரமுங் கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும்
குமரன்கோவி லிலங்குதுபா ரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கள்கூடிய கூடமும் வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும்

என்னசொல்வேன்கதிர் காமத்திலே கோவி
லிலங்கியவலங் காரத்திலே
சன்னிதிகாவலும் சிங்களவர் கோவில்
ஸ்தானிகராவதுப் சிங்களவர்

நன்னகரெங்கினும் சிங்களவர் கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னரசுக் குருத்தவர்கள் விட்ட
மானியங்கள்ரெம்பப் பெற்றவர்கள்

புத்தர்மதத்தி லுகந்தவர்கள் கந்தன்
பூஜையில்நித்த மிருந்தவர்கள்
நித்தஞ்சிங்களவர் கூடுவது மிவர்
நேர்ந்துபணிந்து கொண்டாடுவதும்

எண்டிசைதோறும் புகழ்வாசன் வுல
கெங்குஞ்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடி கந்தன்
காலாயுதக்கொடி வீரனடி

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மேய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடி அவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி

சிறப்பைச்சொல்லுகிறேன் தானும் அந்த
தென்னிலங்கையென் பதுதானும்
இருப்பதெந்த விடங்கானும் அதற்
கெப்படிப்போனல் தடந்தோணும்

கண்டி கொழும்பு மிருப்பதெங்கே யிந்த
கார்க்கடல்மத்தியில் தீவுமிங்கே
உண்டானகாரணந் காணுமையா அந்த
உண்மையைச் சொல்லவும் வேணுமையா

சொல்லுறேன்கேளடி மின்னுளே தேவர்
சொஃணசபதத்தால் முன்னுலே
வெல்லவேயாருகம் வீசையிலே தள்ள
மேருமுடியிந்த ஓசையிலே

வந்துவிழுந்த யிடமாச்சு யிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கடலைந் துதித்தவருங் கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும்

ஏழுசுற்றுக்கோட்டை யாக்கியே யிதற்
கிலங்கையென்னும்பேர் தாக்கியே
ஆளுமென்றுபண நற்பாலே சொல்லி
ஆணகுபோனுக் கிப்பாலே

ராணுவத்தோடே ஜெயம்பூண்டான் மன்னன்
ராவணன்தென்னிலங்கையாண்டான்
போனகிரேதா யுகத்தினிலே வந்த
பொற்கொடிசீதையை வனத்தினிலே

கண்டுசிறையெடுத் தோடிவந்தான் ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண்டே திகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான்

சீதையினுலே மனமுகந்து ராமன்
தெர்ப்பசயனமதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக் கன்னி
யாகுமரி யெல்லைகண்டுறுதி

பரப்பிலேபத்து யோசனையாய்க் கவிப்
படைமலைகொண்டதற்கிணையாய்

கூவுங்குயில்மயில் கூட்டம்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும்
கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மதை கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும்
மாணிக்கக்கெங்கையா ரோடுவதும்நித்தம்
மாதவர்வந்து நீராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே
வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும்
குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூட்டமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும்
என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தின்
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர்
நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள்
புத்தமதத்தி லுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்த மிகுந்தவர்கள்
நித்தமும்சிங்களவர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும்
தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்பர
தேசச்சன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமைசொல்ல நல்லதடி

யெண்டிசைதோறும் புகழ்வார்கள்கொழும்
பெங்கும்சிறந்த புகழ்வார்கள்கொழும்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி
செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
சிறப்பை நான்சொல்லக் கேளுங்கடி
சிறப்பைச்சொன்னவ ரேகாணும் அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்
யிருப்பதெந்த விடங்காணும் அதற்
கெப்படிபோனல் நடந்தோணும்
கண்டிகொழும்பு மிருப்புதெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியிலத் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா
சொல்லுகிறேன்கேளடி மின்னுளேதேவர்
சொன்னசபதத்தாலே முன்னாலே
வெல்லவேமாருதம் வீசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே
வந்துவிழுந்த யிடமாச்சுதேயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும்
ஏழுசுற்றுக்கோட்டை யாக்கியே யிதற்
கிலங்கையென்னும்பேர் தாக்கியே
ஆளுமென்றுபண நற்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே
ராணுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்றென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே
கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்

நாட்டமுள்ளநகு லேஷ்பரமாம் சிவ
நாதர்க்குகந்தகோ ணேஷ்பரமாம்

தண்டேஷ்புரம்வெகு தகுதியாம் ஐபன்
சாத்தாக்கள்கோவிலோர் பகுதியாம்
எண்டிசைமெய்த்த குமாரபுரம் புக
ழிலங்குசந்திரசேகரபுரம்

கண்டவர்மெய்த்த பர்விட்டபுரம் ராம
கர்த்தரால்செய்த தனேகபுரம்
தொண்டர் துதிக்கும் தலங்களிதாம் பின்னும்
தோணுதிருப்ப தனேகமதாம்

ராமேஷ்புரமிதைச் சேர்ந்ததடி முன்னே
ராமனுதனு லமைந்ததடி
பூமிக்குறித்தான மன்னர்மெத்தப் பட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த

கண்டியென் றும்கோட்டைக் காடியென் றும் நல்ல
கழனி நீர்கொழும் பூரிதென் றும்
அண்டியஊரெல்லாம் கட்டணமாம் கோட்டை
அனுராசபுர பட்டணமாம்

முத்துக்கொளிக்குந் துறையுமுண்டு அதில்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென் று ஊருமுண்டு அதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு

பன்னகாமமுந்துறை நாடாம் யாழ்ப்
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகமெல்லை யிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை

கண்டவிடமெல்லா மூராச்சு கோவில்
கட்டியகட்டடம்பேராச்சு
திண்டு முண்டாய்ப்பழி கொண்டார்கள் நல்ல
சிங்களராஜாக்களாண்டார்கள்

கண்டியையாண்டிடும் வீரதுங்கன் இதில்
கட்டிடும்விக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும் இவன்
தலைமுறைவரை ராஜர்களும்

தொண்ணூற்றொருமுடி மன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில் யிதில்
மேவியரசிட்ட பேரவரில்

கண்டியரசனும் முன்னாலே அதில்
கட்டடங்காணலாம் கண்ணாலே
வண்டனதிகாரக் காரனடி. அவன்
வம்மிஷம்நாயக்க ராஜனடி

அதற்குமுந்திய ராஜர்தொட்டுக் கட்டி
ஆண்டவிதமெல்லாம் சீறுகெட்டு
மதிப்பதர்க்கிடந் தோணாமல்க்காடு
மண்டியிருப்பதுங் காணாமல்

இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன் இந்த
இலங்கைநாடெல்லாம் ராசசிங்கன்
சங்கையுடனரசாளையிலே சீமை
தன்னிலிருந்திடும் வேளையிலே

சிங்காரக்கப்பலில் பறங்கியே யிந்த
தீவுக்குள்ளேவந்து யிறங்கியே
தங்கச்சிகரம் தனைவகுத்தும் புத்தர்
தாவுங்கழனித் திசையடுத்தும்

கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டி யதைக்
கொழும்பென்று சொல்லிப்பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டை கட்டி நல்ல
விஸ்தாரமாத்திரம் பேட்டைகட்டி

தொட்டதிருக்கோண மாமலையும் அந்த
துறைமுகங்கண்டகோயமலையும்

ஒட்டாமல்தள்ளி விரைவாகி வந்து
உயர்ந்தரக்கா ருசாராகி

ஆண்டுசிலகாலம் விட்டார்கள் பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தி யிந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்தி

கும்பினிஆங்கிலேயர் ஒட்டிக்கொண்டார் யிந்த
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றிகொண்டார் நல்ல
வங்காளக்கச்சேரி செய்துவிண்டார்

கண்டியராசனைத் தெரிந்திட்டார் பெருங்
கள்ளர்களைச்சுட்டு வருந்திட்டார்
வண்டிக்கிரோட்டுக ளுண்டுபண்ணி அதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி

துறைமுகங்களை நேராக்கி காப்பித்
தோட்டங்களையெல்லாம்சீராக்கி
நிறையயிந்திரச் செனங்களும் வந்து
நிறைந்ததீர்வையின் பணங்களும்

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார் பேசி
விளம்பும்ஆபீசை முந்திவைத்தார்
என்சொல்லுவேனடி மின்னரசே யிந்த
இங்கிலீசுக்காரர் தன்னரசை

பூட்டிரயிலையும் நடத்தினர் யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டீகமான கடலலைக்கிக் கூட
தடுத்தணைகட்டி யேநெருக்கி

தண்டவாளசூட்சம் வைத்தாரே மலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
சங்கையும்சிங்கார முண்டாச்சு வெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு

பூமியில்கள்ளர் பயம்போச்சு வெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால் ஒரு
தாழ்வொன் றுமில்லையே தோழிப்பெண்ணே

தாழ்வில்லாத்தன்மை யுடன்வாழும் கவி
சாற்றியமன்னவ ரேகேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில் வந்த
ஆரப்பத்தின்கதை சொல்லுமையா

ஆரம்பமென்ன புராணத்திலே கதை
அறிந்தமட்டு மின்னேரத்திலே
கூறவுங்கேளுங்கள் பெண்ணுரே வர்ண
கோலவிழிக்கயல்கண்ணுரே

திருப்பரங்குன் றத்திலே பிறந்தார் பின்பு
தெய்வயானையை மணமுவந்தார்
மருப்படாவள்ளியை மணந்தார் அப்பால்
வள்ளியுந்தானும் மிகச்சேர்ந்தார்

வள்ளிதெய்வானையுடன்றனே இங்கு
வந்தார்கதிர்காமத்திற்றனே
புள்ளிமயிலேறிவீதிவந்தார் அருள்
பொங்கிய கங்கையிடமமர்ந்தார்

கண்டுமனிதர்கள் தானுர்த்து வரக்
கந்தனுமப்போதுதான் பார்த்து
பண்டுமலைமேலே வீற்றிருந்தார் இரு
பத்தினிமாருடன் றனிருந்தார்

ஆனதினுற்கதிர்காமமென் று பெய
ராகயிருந்திடும் நாமமொன் று
மானகரோர்களறியார்கள் மலை
வாசத்தில்சென் று தெரியார்கள்

விளங்கும்தீப தெரிசனமும் நவில்
மேளம்தவண்டை முரசினமும்

முழங்கச்சன்னதி முன்பாகச் சென்று
மூலஸ்தானத்தையும் பாருங்கடி

மூலஸ்தானங்கள் தெரியாதே சபை
முன்னந்தலங்களுந் தோணுதே
சீலமிகுகந்தன் சன்னதியி லிட்ட
திரைமறைப்பைக் கேள்தோழியரே

திரைமறைப்பு வளமையடி கந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானுற்குக் கந்தன்
முன்மணிவாசலுந் தோணுது

முன்மணிவாசல் கடக்கனுமே சுவாமி
மூலஸ்தானங்க ளடுக்கனுமே
நன்மையுகந்த கதிரேசன் தன்னை
நானறியவகை சொல்லுமையா

நானுமறிந்தது மில்லையடி சொன்னால்
நம்புவையோ வெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோணுது கந்தன்
சேருவை தன்னையுங்காணுது

தேரியதோர்வர்ணப் பேழையொன்று அதை
திருவலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேறி வீதி
பவனிவாரது தான்கோறி

பவனிவந்திடும் வேளையிலே நல்ல
பாவினையாக முன்னாளையிலே
அவனியெல்லாம்புகழ்ந் தேற்றும் பேழைக்
கருள் நிறைந்தது தான்தோற்றும்

அருள் நிறைந்து சமைந்தவித்தை வெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறியறிந்தது காணலையே கண்டு
,கொள்ளமுடியாது வள்ளலையே

வள்ளலிருந்ததை நாடாமல் முழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணிச் சோதிக்கையாம் இங்கே
செப்போடிட்டது மேதுக்கையா

செப்போடல்லவே ஒப்பாகும் யிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதோர்கண்ணுக்கு நாணுமடி இது
செப்போடாகவே தோணுமடி

செப்போடிட்டதை மாத்தையிலே பின்னும்
சீர்திருத்திவழி சாத்தையிலே
அப்போது மூலஸ்தானத்தை யாவது
அறிந்துகொள்ளாரோ காரணத்தை

அறிந்தசுந்தைய னுத்தரவால் மன்ன
ராண்டுக்கொருதர யாத்திடுவார்
உரியசுத்தபவு னங்கொண்டு அங்கு
உகந்திருந்தவர் கோடியுண்டு

கோடிபேருண்டென்று முன்னவரே கந்தன்
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைதான் கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண்

சேகரமானமலையுண்டு சுத்தி
திரண்டகானல் வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடி மலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி

போனவரந்த மலைவளத்தைச் சொல்லிப்
புகழக்கேட்டே னதன்விதத்தை
ஆனலவ ரெப்படிப்போனர் போக
லாகாதென்ற விதங்கானர்

ஆகாதென்றது மெய்தாண்டி முரு
கையனுத்தரவி னல்தாண்டி

ஏநின்றுலந்தக் கதிர்மலைக்கி வழி
யிசையத்தோணு மிருள்விலக்கி

இசையும்நல்ல வழியுமென்றீர் முன்னே
யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்கிச்செல்லாமல் தட்டிடுமோ கண்டு
சேரும்படியங்கே விட்டிடுமோ

விட்டுவிடாதது மெய்யதற்கே கதிர்
வேலவனுத்தர வாவதற்கே
தட்டுப்படாது மிருக்பெல்லாம் வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம்

நடந்துகாணுவ தெந்தமலை கந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொணிகளுண்டோ அங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ

அண்டர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொண்டிடு மானிடர்க்கு சபை
காணவுந்தோணு தோழிப்பெண்ணே

தோணுமென்றது மெய்யவரும் யிருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவர் சபை
கண்டுதொழாமல் வருவாரோ

கண்டுதொழுவதெல்லாமலையும் எங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட தாவலடி அங்கே
தோதாய் வயிரவன் காவலடி

நாடியபேர்கள் மலையடுத்துக் கந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலே ஓ
ராண்டுக்கொருதரம் வேளையிலே

வாரதுண்டுநகரத்தார்கள் யென்றும்
மானகருக்கு யிசைந்தோர்கள்
ஆறுமுகன்கதிரேசனுக்கு யிது
ஆடித்திருவிழா முக்கியமே

முக்கியமாய்க்கதிர் காமத்திலே சுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரைச்செம்பு எதேஷ்டமடி கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி

கூட்டமும்நாட்டமுங் கொண்டாடும் குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய பெருநாளில் நிதம்
நடத்துகின்ற திருநாளில்

வளமைவேழத்தின் மேல்மிகுந்து கந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிடும் வீதியிலே வரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி

கந்தனுக் கேற்றதிருநாளி லிந்தக்
காசினியோரும் வருநாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக் கந்தன்
தேறுமேலேருவ தென்றைக்கையா

தேருமேலேறும் வளமையில்லை சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிச் சுவாமி
நீரறுப்பானதைப் பாருங்கடி

நீரறுப்பென்றதும் தோன்றலையே யிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கலையே
தேருமின்னாட்டு வளமைகலை யிதைச்
சீருடன்சொல்லும் புலமைகலை

சீருள்ளயாணிக்கக் கெங்கையிலே சுவாமி
தீர்த்தங்கொடுத்தபின் அங்கையிலே

நேருள்ளசிங்களப் பாஷையிலே யிதை
நீரறுப்பென்பதும் ஓசையிலே

கேசவன்தன்னருமைக்குறிய வள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிகுந்திடுஞ்செந்த தமிழைச் சொன்ன
மன்னவரேயுமக் கெந்தவூரு

சென்னல்விளைராம நாதபுரம் சீமைச்
சேது நகர் திருப் புல்லாணி
நன்னயமாகிய ஊர்தாண்டி தங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி

பேரையுமூரையு மேபுகழ்ந்து சொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்த
தாருலவுங்கதிர் காமத்துக்கே நீரும்
தானிங்கேவந்த வயனமென்ன

வந்துகொழும்பதனிற் சிறந்து வெகு
வாசமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலே கண்டு
கைதொழுதேத்தினேன் பெண்ணாளே

கைதொழுதேத்தியே மெய்வாசன் நம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனிவன் மேலே
செந்தமிழால்துதி சொன்னேனான்

சொல்லச்செவியுற்றுக் கேட்டவர்க்கு வரும்
துன்பமகற்றுமிப் பாட்டவர்க்கும்
தில்லையெல்லாம்வல்லத் தாண்டவத்தான் வாழ்வு
தேவிசிவகாமி யின்தவத்தால்

அருள்பொருதுமதுரேசன் வள்ளி
யம்மைதெய்வானை கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம் கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம்

தீராதநோய்களைத் தீர்த்தவண்டி சுவாமி
சித்தம்வைத்து நம்மைக் காப்பவன்டி
நாரணனுக்கு மருகனவன் ஜெக
நாதன்செந்தூரு முருகனவன

தேவசேனாபதிதாண்டி கூவும்
சித்திரசேவல்க் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில் நின்று
மூழங்கக்கும்மி யடியுங்கடி

சிம்மாசனத்திலிருந்தவரை வளம்
சேர்கதிர்காம முகந்தவரை
இம்மானிலத்தவ ரேற்றியே அவ
ரெண்ணப் படியேதான்தோற்றியே

செலுத்தும்வேடிக்கை பாருங்கடி கந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
சலத்தில்முக்கியம் பெத்தவண்டி கந்தன்
சாமிக்கலங்காரம் நித்தமடி

முப்பத்துமுக்கோடி தேவருக்கும் நல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் வானவர்க்கும் திரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும்

சிங்காரக்கும்மி தமிழ்ச்சிறக்கும் நம்மன்
செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும் ஜெய
மங்களம்வாழி மிகவாழி

சித்திரவேலா யுதம்வாழி கந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னிதியில் புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம்

கதிர்காமக்கும்மி முற்றிற்று.

சிவமயம்.

கதிர்காம மாலை.

சீரார்கதிர்காமச் செந்தே னறுமுகவன்
பாராருமாலைதனைப் பாடவரமேயருள்வாய்
தாரார்குழலுமையாள் தானீன்றதற்பரனே
காரானைமேனிக் கணபதியேகாப்பாமே

நித்தமுனைத்துதித்து நீணிலத்தோர்கொண்டாட
பத்துலட்சங் கோடிதமிழ்ப் பாடவரமேயருள்வாய்
அத்தனருள்குமரா ஆயன்மருகோனே
கந்தனே எங்கள் கதிர்காமவேலோனே

பாலாறுநெய்யாறு பரதேசிக்கன்னமிடுங்
கோலாகலக்குமராகோவே யுனைத்துதிப்பேன்
வேலாயுதனே விசாகாவிளங்குண்டைக்
காலாயுதம்படைத்த கதிர்காமவேலோனே

வாக்குமன மொன்றாய் வண்மையுடனின்பதத்தால்
ஏற்குந்தமிழ்பாடஎனக்கு வரமேயருள்வாய்
ஆர்க்கும்பெரியோனே அமரர்சிறைமீட்டோனே
கார்க்கும்பெருமாளே கதிர்காமவேலோனே

அனுதினமுமுனை நினைந்து அடியேனுமீடேற
உனதுடையமலர்பதத்தை யுகந்தெனக்குத்தந்தருள்வாய்
மனதிலேயும் வாக்கிலேயும் வஞ்சகமில்லாதடியேன்
கனவிலேயும்நான்மறவேன் கதிர்காமவேலோனே

வில்லாலடித்த விசயனுக்குப்பாசுபதம்
வல்லாயுதங்கொடுத்த மாயோன்மருகோனே
எல்லோர்க்கும் நல்லபிரானென்றென்னு முன்மனமும்
கல்லாச்சுதோமனது கதிர்காமவேலோனே

நீயிருக்கத்தெய்வானை நெஞ்சிருக்கவள்ளியம்மைத்
தாயிருக்கவேறு சலிப்புவருவானேன்
வேயிருக்கவேபசுவின் வெண்ணெயுண்டமால்மருகா
காயிருக்கத்தென் கோவே கதிர்காமவேலோனே

உந்தாள் துணையெனவே உறுதியுடன் நம்புமெந்தன்
சிந்தாகுலந்தவிர செல்வமிகத்தந்தருள்வாய்
நிந்தாவென்றுடும் சிவன்மகனேதேவர்தொழும்
கந்தாகுமரா கதிர்காமவேலோனே

என்னெஞ்சும்நானுமிடஞ்சல்படுந்துயரம
உன்னெஞ்சறிய உனக்குநான் சொன்னதில்லை
அன்னஞ்சிறுநடையாளன்புளதெய்வயானைபுகள்
கன்னல்மொழிவள்ளிபங்கா கதிர்காமவேலோனே

வானுலுகுத்த மஹாசூரனைவதைத்துச்
சேனுடுகாத்தருளும் செங்கைவடிவேலோனே
பூணாரம்கண்டவுந்தன் பொற்கமலச்சேவடியைக்
காணாததும்கண்ணோ கதிர்காமவேலோனே

மிண்டிச்சமர்க்களத்தில் எமன்மேலுங்கைகலந்து
மண்டிப்பொருமசுரர்வாணுள் தனைவதைத்து
தெண்டித்தமரர் சிறைமீட்டசேவகனே
கண்டிவளநடா கதிர்காமவேலோனே

எட்டிலெழுதவென்று லெழுதத்துலையாதிலங்கை
நாட்டாரரியநடத்துவது முன்புதுமை
கோட்டானைசிங்கம் கொடும்புலிகள்வந்தாலும்
காட்டாதேநீயருள்வாய் கதிர்காமவேலோனே

பட்டுடையும் ஒப்பினையும் பாசாங்குசதரமும்
இட்டசெபமாலையிலங்குமுகமாறுடனே
துட்டரணசூரர்களை துரத்திவடிவேல்விடுத்த
கட்டழகாவாகா கதிர்காமவேலோனே

மயிலாடுமான் மறைகள் வரிப்புலிகள்வானரங்கள்
யிலாகவாழும் பரமபதநன்னாட்டில்

துயிலாவிளக்கொழிபோல் துலங்கும்வடிவேல்பிடித்த
சயிலாசமென்னும் கதிர்காமவேலோனே

நல்லாதரவுடனே நானுனது பாதகதி
அல்லாதுவேறுளதோ அஞ்சலெனக்காத்தருள்வாய்
பல்லாயிரங்கோடிபணிந்துவரமருளக்
கல்லோதானுன்மனது கதிர்காமவேலோனே

அன்றமரர்கொண்டாட அசுரர்குலம்வேரறுத்து
குன்றுருவவேல்விடுத்தக்கோழிக்கொடியோனே
இன்றடியேனீடேற யெனக்குவரமேயருள்வாய்
கண்றெரிந்தோன்றன்மருகா கதிர்காமவேலோனே

அன்னையுநீதந்தையுநீ யாருனுமெந்தனுக்குப்
பின்னையுலகுதனிற் பேசுவதும்நீயலவோ
முன்னேபுரமெரித்த முக்கணனூர்தன்புதல்வா
கன்னல்சொரிமுத்தே கதிர்காமவேலோனே

தேங்காய்க்குள்தண்ணீர் திருவிளமேயானுப் போல்
பாங்காகநீயெனக்கு பாக்கியங்கள்தந்தருள்வாய்
ஓங்காரத்துட்பொருளேவுமையாள் திருமகனே
காங்கயனே யெங்கள் கதிர்காமவேலோனே

உள்ளாளனுப்பாமல் ஓடிவந்தீராசையினுல்
விள்ளாமல்சும்மா வெறுங்கைமுழமிடுமோ
துள்ளாதே போம்போம் துடிதுடித்துஓடிவந்த
கள்ளாவறிவேன் கதிர்காமவேலோனே

துள்ளிமயிலேறி துடிதுடித்துஓடிவந்து
வெள்ளிதகைதந்தவர்போல் வேசையுடன்சொல்வானே
அள்ளிகொடுத்தால்சும்மாஅளந்துகொடுத்தாற்கடனும
கள்ளியென்றுசொன்னீர் கதிர்காமவேலோனே

போதாதோதேவா நீர் பொன்னுமயில் மீதேறி
வாதாகயென்வீட்டில் வந்தால்வழக்குமுண்டோ
நீதமோயெள்ளளவும் நிஷ்டூரம்செய்தோமோ
காதமோசொல்லுங்கதிர்காமவேலோனே

மணக்கோலமானதினால் மறந்தீரறியாமல்
எனக்கோ அவளுமக்கு யிட்டமருந்தின்பிசகோ
பிணக்கோயென்மேனுடெதிரே பேசாமல்மோடிபண்ண
கணக்கோதான்சொல்லும் கதிர்காமவேலோனே

சுத்தனேஞானச்சுடரே சுடர்விளக்கே
பித்தனார்பெற்றகண்ணே பெருமான்மருகோனே
குத்தமேசெய்தாலும் கொண்டுபொருத்தருள்வாய்
கத்தனேயெங்கள் கதிர்காமவேலோனே

செங்கரத்தில்வேலுடனே சிந்தையுள்ளேவீற்றிருந்து
பங்கப்படுந்துயரம் பாதகத்தைதீர்த்தருள்வாய்
மங்கைவள்ளிபங்காளா மணிக்கமின்னுதரும்
கங்கைவளநாடா கதிர்காமவேலோனே

கொண்டீரோமோகமெத்தக் கோதையவள்வாயமிர்தம்
உண்டீரோமெத்த உபசாரஞ்செய்தாளோ
பெண்டீரும்நானிருக்க பெண்டீருமேவேறு
கண்டீரோசொல்லும் கதிர்காமவேலோனே

பூட்டுகிறீராசையின்பம் போகாக்குறைச்சலுக்கு
மூட்டுகிறீர்சண்டை முடிப்பெனக்குத்தந்ததுண்டோ
தீட்டுகிறீர்தேனமிர்தம் செங்கையிலேவைவுந்தும்
காட்டுகிறீர்சும்மா கதிர்காமவேலோனே

சென்னியிலே பூவிருக்க செங்கயிலேவேலிருக்க
பன்னிரண்டுதோளிருக்க பயமேன்வருவானேன்
முன்னம்வருஞ்சூரர்களை முடிந்தவேல்விடுத்த
கன்னல்மொழிவள்ளிபங்கா கதிர்காமவேலோனே

துய்யாசரணம் துலங்குவடிவேலெடுத்த
மெய்யாசரணமுனேவேண்டுவரந்தந்தருள்வாய்
அய்யாசரணம் அமரர்களை காத்தமுரு
கையாசரணம் கதிர்காமவேலோனே

சுப்பிரமணிய சுவாமிமீது கதிர்காமமாலை
முற்றிற்று.

Not punched
22184

உ

பரயபதி துணை.



இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் சகலவிதமான புஸ்தகங்களும் என்னிடந் தயாரிலிருக்கிறபடியால் வேண்டியவர்கள் அடியிற்கண்டவிலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

S. வேணுகோபால்நாயுடு.

புஸ்தகஷாப் புதுமண்டபம் ம